Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO. 13/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.5, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புஷ்பாவதி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அறிவரசன் | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | மேல் அச்சமங்கலம் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 26th day of September 2023.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி அப்துல்லா பாஷா ஆஜரில் உள்ளார்)**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். எங்கள் வீட்டின் அருகே உள்ள அ.சா.1 ன் வீட்டில் திருடுபோனது தொடர்பாக கடந்த 08.05.2022 அன்று போலிசார் எங்கள் வீட்டிடம் வந்து விசாரித்தார்கள். பின்பு வரைபடம் ஒன்று வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக மேற்படி கையொப்பத்தை என்னிடம் பெற்று சென்றார்கள். **பார்வை மகஜர் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**

அ.சா.1 ன் வீட்டிற்கும் என்னுடைய வீட்டிற்கும் சுமார் 10 அடி இருக்கும். காவல் நிலையத்தில் புகார் கொடுக்க நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், என் முன்னிலையில் வரைபடம் வரையவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ன் வீட்டின் அருகே என் வீடு இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO. 13/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்தோஷ்குமார் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | செந்தூர் காந்தி | தொழில் | தனியார் வேலை |
| கிராமம் | மேல் அச்சமங்கலம் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 25 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 26th day of September 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.- ( எதிரி அப்துல்லா பாஷா ஆஜரில் உள்ளார்)**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரதிதேவி என்னுடைய தாயார் ஆவார். கடந்த 05.04.2022 அன்று நான் என் தாயாரை திருப்பத்துர் பாரத ஸ்டேட் வங்கிக்கு பணம் எடுப்பதற்காக அழைத்து வந்து மதியம் 3.00 மணிக்கு மீண்டும் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, எங்கள் வீட்டின் பின்பக்க கதவு உடைந்திருந்தது. பின்பு நாங்கள் உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டு, அதிலிருந்த ஒரு செயின், ஒரு கொலுசு, ரூ.20.000/– பணம் ஆகியவை திருடுபோய் இருந்தது. பின்பு போலிஸீக்கு தகவல் சொன்னோம். போலிசார் வந்து அனைவரையும் விசாரித்தார்கள். பின்பு 06.04.2022 அன்று அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**

காவல் நிலையத்திற்கு நாங்கள் புகார் கொடுக்க சென்றபோது எங்களுடன் புஷ்பாவதி மற்றும் சுரேஷ் ஆகியோரும் உடன் வந்தார்கள் என்றால் சரிதான். புகார் கொடுத்த தேதி போலிசார் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்து தொடர்ந்து 4 நாட்கள் போலிசார் எங்கள் வீட்டிடம் வந்து எங்களை விசாரித்தார்கள். எங்கள் வீட்டில் திருடிய நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness